මාධ්‍ය නිවේදනය - 22

## පාර්ලිමේන්තු මැතිවරණය - 2015.08.17

## පෞද්ගලික අංශයේ සේවයේ නියුතු අයවළුන්ට, ජාතික මැතිවරණ වලදී වැටුප් හෝ පෞද්ගලික නිවාඩු අහිමිවීමකින් තොරව ස්වකීය ඡන්දය දීමට හැකිවනු පිණිස නිවාඩු ලබාදීම

තම ඡන්දය දීමට හැකි වනු පිණිස සේවා නියුක්තීන්ට නිවාඩු දීමට සේවා යෝජකයින් කටයුතු කළ යුතු බවට 1981 අංක 1 දරන පාර්ලිමේන්තු මැතිවරණ පනතේ 122 වැනි වගන්තියෙන් විධිවිධාන සලසා ඇති අතර 2015.08.17 දින පැවැත්වීමට නියමිත පාර්ලිමේන්තු මැතිවරණයේදී ද එය නිසි පරිදි ක්‍රියාත්මක විය යුතුව ඇත.

රාජ්‍ය අංශයේ, නිලධරයන්ගේ විශේෂ නිවාඩු පිළිබඳව ආයතන සංග්‍රහයේ XII වන පරිච්ඡේදයේ 12.3 ඡේදයේ දක්වා ඇති පරිදි, පාර්ලිමේන්තු මැතිවරණයකදී අවම කාලය පැය 4ක් ලෙස ද ඡන්දය ප්‍රකාශ කිරීමට යාම පිණිස අවශ්‍යයැයි හැඟෙන අඛණ්ඩ කාලයක් සඳහා වැටුප් අඩු කිරීමක් නොමැතිව විශේෂ නිවාඩු ලබා දිය යුතු බව ද දක්වා ඇත.

එසේ වුවද පෞද්ගලික අංශයේ, සේවා නියුක්තීන්ට ලිඛිත නියමයකින් පැනවූ එවැනි විශේෂ නිවාඩු ලබා දීමේ ක්‍රමවේදයක් නොමැති හෙයින් බොහෝ සේවා යෝජකයින් තම සේවා නියුක්තීන්ට ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා වූ නිවාඩු ලබා නොදෙන බවට පසුගිය ඡන්ද විමසීම් කිහිපයේදීම පැමිණිලි ලැබී ඇති බැවින් ඉහත කරුණට අදාළව 2014.12.22 දින ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව විසින් කම්කරු හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශයේ ලේකම්, කම්කරු කොමසාරිස් ජනරාල්, මැතිවරණ කොමසාරිස් කැඳවා කොමිෂන් සභාවේ ගරු සභාපතිතුමා, ගරු කොමසාරිස්වරු හා නීති ලේකම්වරයා ඇතුළු සෙසු නිලධාරීන් සමඟ මානව හිමිකම් කොමිෂන් සභාවේදී පවත්වනු ලැබූ සාකච්ඡාවේදී ඇති කර ගන්නා ලද එකඟතාව අනුව පෞද්ගලික අංශයේ සේවකයින්ට ජාතික මැතිවරණයකදී ඡන්දය පාවිච්චි කිරීමට යෑමට හා ඊමට නිවාඩු ලබා දීම සඳහා දුර හා කාලය අතර සම්බන්ධතාවක් සකස්කරන ලෙස ගරු කොමිෂන් සභාව විසින් කරන ලද දැන්වීම අනුව මතු සඳහන් වගුවට අනුකූලව පෞද්ගලික අංශයේ සේවය කරන්නා වූ සේවක සේවිකාවන්ට, සිය ඡන්දය ප්‍රකාශ කිරීම සඳහා වූ නිවාඩු ලබාදීමට අදාළ සේවා යෝජකයින් කටයුතු කිරීම සුදුසු බවට මැතිවරණ දෙපාර්තමේන්තුව විසින් නිර්දේශ කර තිබේ.

| ඡන්දය පාවිච්චි කිරීම සඳහා සේවා ස්ථානයේ සිට තම ඡන්ද පොළට යා යුතු දුර ප්‍රමාණය | ලබා දියයුතු අවම නිවාඩු කාලසීමාව |
|---|---|
| කි.මී. 40 ක් හෝ ඊට අඩු නම් | දින භාගයයි. |
| කි.මී. 40 ත් - 100 ත් අතර නම් | දින එකයි. |
| කි.මී. 100 ත් - 150 ත් අතර නම් | දින 1 1/2 යි. |
| කි.මී. 150 ට වැඩි නම් | දින 2 යි. |

ඉහත සටහනින් යෝජනා කර ඇත්තේ ලබා දිය යුතු අවම කාලය වන අතර දිවයිනේ සමහර ඡන්දදායකයින්ට ඡන්ද පොළට යෑමට හා ඊමට දින තුනක් අවශ්‍යවන අවස්ථා ද සැලකිය යුතු සංඛ්‍යාවක් තිබෙන හෙයින් අවස්ථාවෝචිතව දින තුනක් නිවාඩු දීමට සිදු වන බවද සැලකිල්ලට ගත යුතු වේ.

මෙහිදී, සේවා නියුක්තීන් විසින් ලිඛිත ඉල්ලීමක් මඟින් නිවාඩු ඉල්ලුම් කළ යුතු අතර, සෑම සේවා යෝජකයකු විසින්ම විශේෂ නිවාඩු ඉල්ලුම්කළ තැනැත්තන් හා නිවාඩු ප්‍රදානය කරන කාලසීමාව දැක්වෙන ලේඛනයක් පිළියෙළ කර එය, සේවා ස්ථානයේ ප්‍රදර්ශනය කළ යුතු ද වේ.

මානව හිමිකම් කොමිෂන් සභාවේ දී කොමිෂන් සභාවේ මාර්ගෝපදේශ සැලකිල්ලට ගෙන කම්කරු හා කම්කරු සබඳතා අමාත්‍යාංශයේ ලේකම්, කම්කරු කොමසාරිස් ජනරාල් හා මා සහභාගී වූ සාකච්ඡාවේදී ඇති කරගන්නා ලද එකඟතාව අනුව ජාතික මැතිවරණයකදී ඡන්දය පාවිච්චි කිරීමට යාම සහ ඊම පිළිබඳ පෞද්ගලික අංශය සඳහා සැකසූ පෙර සඳහන් නිර්දේශවලට අනුකූලතාව දක්වමින් ස්වකීය ආයතනයේ සේවා නියුක්තීන්ට ඡන්දය දීමට යෑමට හා ඊමට ප්‍රමාණවත් නිවාඩු ලබා දෙන ලෙස සියලුම සේවා යෝජකයන් වෙතින් කාරුණිකව ඉල්ලා සිටිනු ලැබේ.

මැතිවරණ මහලේකම් කාර්යාලය,
සරණ මාවත,
රාජගිරිය.
2015.07.27

මහින්ද දේශප්‍රිය
මැතිවරණ කොමසාරිස්

பாராளுமன்றத் தேர்தல் - 2015.08.17
தனியார் பிரிவுகளின் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, தேசிய மட்டத்திலான தேர்தல்களின் போது சம்பளம் அல்லது சொந்த லீவுகள் இழப்பொன்றின்றி தமது வாக்கை அளிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்குதல்.

தமது வாக்கை அளிப்பதற்காக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்காக தொழில்தருநர்கள் நடவடிக்கையெடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 2015.08.17 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள பாராளுமன்றத் தேர்தலின் போதும் அதை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

அரச பிரிவின் அலுவலர்களின் விஷேட விடுமுறைகள் தொடர்பான தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத் தேர்தலுக்காக ஆகக் குறைந்தது 4 மணித்தியாலங்களெனவும், வாக்களிக்க செல்வதற்கு தேவைப்படுமெனக் கருதக்கூடிய தொடர்ச்சியான காலப்பகுதியொன்றுக்கு சம்பள இழப்பற்ற விஷேட விடுமுறை வழங்க வேண்டுமெனவும், குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும், தனியார் பிரிவுகளில் கடமையிலீடுபட்டுள்ளவர்களுக்கு எழுத்து மூலமான அத்தகைய விஷேட விடுமுறை வழங்குவது தொடர்பான விதிமுறையொன்று இல்லாததன் காரணமாக பெரும்பாலான தொழில்தருநர்கள் தனது தொழிலாளர்களுக்கு வாக்களிக்கச் செல்ல லீவு வழங்குவதில்லையென கடந்த கால பல தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் மேற்குறித்த விடயம் தொடர்பாக 2014.12.22 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோர் அழைக்கப்பட்டு ஆணைக்குழுவின் கௌரவத் தலைவர், கௌரவ ஆணையாளர்கள் மற்றும் சட்டச் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்களுடன் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேசிய மட்டத்திலான தேர்தலொன்றின் போது வாக்களிக்கச் செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் விடுமுறை வழங்குவதற்காக தூரம் மற்றும் காலம் ஆகியனவற்றுக்கிடையில் தொடர்புபடுத்தலொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கிணங்க, கீழ்காணும் அட்டவணைக்கு இசைவாக தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்க தொழில்தருநர்கள் நடவடிக்கையெடுத்தல் பொருத்தமாகுமெனத் தேர்தல்கள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

| வாக்களிப்பதற்காக கடமை நிலையத்திலிருந்து தனது வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்ல வேண்டியுள்ள தூரளவு | வழங்க வேண்டிய ஆகக் குறைந்த விடுமுறைக் காலம் |
|---|---|
| கி.மீ. 40 அல்லது அதற்குக் குறைவாயின் | அரை நாள் |
| கி.மீ 40 க்கும் 100 க்கும் இடைப்பட்டதெனில் | ஒரு நாள் |
| கி.மீ 100 க்கும் 150 க்கும் இடைப்பட்டதெனில் | 1 ½ நாட்கள் |
| கி.மீ 150 க்கு அதிகமாயின் | 2 நாட்கள் |

மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பது வழங்க வேண்டிய ஆகக் குறைந்த காலமென்பதுடன் நாட்டிலுள்ள ஒரு சில வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று திரும்பி வருவதற்கு 3 நாட்கள் தேவைப்படக்கூடிய கணிசமானளவு இடங்களும் இருக்கின்றமையால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மூன்று நாட்கள் விடுமுறை வழங்க வேண்டியுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இதன்போது, தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எழுத்து மூலமாக விடுமுறை கோர வேண்டுமென்பதுடன், அனைத்து தொழில்தருநர்களும் விஷேட விடுமுறைக்காக விண்ணப்பிக்கின்றவர்களது விடுமுறை வழங்கப்படும் கால எல்லை தொடர்பானதுமான ஆவணமொன்றைத் தயாரித்து அதைக் கடமை நிலையத்தில் காட்சிப்படுத்தி வைக்கவும் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைக் கருத்திற் கொண்டு தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம் ஆகியோருடன் நானும் கலந்து கொண்ட கலந்துரையாடலின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க தேசிய மட்டத்திலான தேர்தலொன்றின் போது வாக்களிப்பதற்காகச் செல்வதற்கும், திரும்பி வருவதற்கும் தனியார் பிரிவுகளுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட பரிந்துரைகளுக்கிணங்கியொழுகி தமது நிறுவனத்தில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வாக்களிக்கச் சென்று திரும்பி வருவதற்குப் போதுமானளவு விடுமுறையை வழங்குமாறு அனைத்து தொழில்தருநர்களிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2015.07.27

**Media Release – No. 22**

## Parliamentary Election – 17.08.2015

## Granting of leave to private sector employees to enable them to cast their votes at national elections without loss of pay or their private leave

In terms of the Section 122 of the Parliamentary Elections Act, No. 1 of 1981, the leave necessary to every employee for the purpose of voting should be afforded by their respective employers. This should necessarily be implemented at the Parliamentary Election which is to be held on 17.08.2015 also.

Paragraph 12.3 in the Chapter XII of the Establishment Code which is for the special leave of the public officers also states that a public officer should be granted a special paid leave, minimum period of four hours, for such a continuous period as he may deem necessary, to enable him to cast his vote at an Parliamentary Election.

However, since there have been several complaints from the private sector employees that they have not been granted leave to exercise their franchise at previously held elections as there is no methodology of granting special leave stipulated by a written order, the Secretary to the Ministry of Labour and Labour Affairs, Commissioner General of Labour and Commissioner of Elections were convened for a discussion with the Hon. President, Hon. Commissioners, the Secretary of Law and with other officers of the Human Rights Commission of Sri Lanka on 22.12.2014 and according to their consent Hon. Commission requested the preparation a formulae based on the distance and the time, to grant leave to the private sector employees to enable them to cast their votes at a national election. Therefore, the Department of Elections has recommended the following table for the use by private sector employers to grant leave to their employees to cast their votes.

| Distance from his/her place of work to his/her polling station | Minimum period to be granted |
|---|---|
| 40km or less | ½ day |
| 40 – 100 km | 1 day |
| 100 – 150 km | 1 ½ days |
| Above 150 km | 2 days |

The minimum period to be granted is suggested in the above table. But there can be several occasions where three days leave as may be deem necessary to grant to employees who will need three days to travel from their places of work to the prescribed polling station and to return.

Every employee should request their leave in writing and every employer should prepare and exhibit a document including the persons applied for the special leave and the period of leave granted to them.

The employers are kindly requested, to follow the aforesaid recommendations which were prepared according to the agreement made in the discussion of the Human Rights Commission with the Secretary to the Ministry of Labour and Labour Affairs, Commissioner General of Labour and me, considering the guidelines of the Human Rights Commission, to grant sufficient period of leave to their employees for them to cast their votes at a national election.

**Mahinda Deshapriya**
Commissioner of Elections

Elections Secretariat
Sarana Mawatha,
Rajagiriya
27.07.2015